## தமிழ் ஆய்வுலகத்திற்குப் பேரிழப்பு!

# புகழ்பெற்ற கல்வெட்டு அறிஞர் புலவர் செ.ராசு மறைவு!

## முதல்வர் மு.க. ஸ்டாலின் இரங்கல் செய்தி!



**சென்னை, ஆக.10-**

**புகழ்பெற்ற கல்வெட்டு அறிஞர் புலவர் செ. ராசு அவர்களின் மறைவு தமிழ் ஆய்வு லகத்திற்குப் பேரிழப்பு என முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.**

புகழ்பெற்ற கல்வெட்டு அறிஞர் புலவர் செ. ராசு அவர்களின் மறைவையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

புகழ்பெற்ற கல்வெட்டு அறிஞர் புலவர் செ. ராசு (85) அவர்கள் வயது மூப்பின் காரணமாக மறைந்தார் என அறிந்து வருத்தமுற்றேன்.

பல கல்வெட்டுகள், செப்பேடுகள், சுவடிகளைப் பதிப்பித்துத் தமிழுக்குப் பெருந்தொண்டாற்றிய அவரது மறைவு தமிழ் ஆய்வுலகத்துக்குப் பேரிழப்பு ஆகும்.

அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், தமிழறிஞர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.



திருவள்ளூர் மத்திய மாவட்ட பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு ஒன்றிய கழக செயலாளர் ப.ச.கமலேஷ் ஏற்பாட்டில் சென்னீசேரிகுப்பம் பகுதியில் முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ தலைமையில் கலைஞரின் திருவுருவப்படத்திற்கு மலர் மாலை தூவி பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கினார் அருகில் சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, நிர்வாகிகள் நடுகுத்தகை ஜெ.ரமேஷ், சி.ஜெரால்டு, காயத்திரி ஸ்ரீதர், எம். முத்தழிழ்செல்வன், வி.குமார், மாநகர செயலாளர் சன்பிரகாஷ், டி.அண்ணாமலை, ஏ.ஜனார்த்தனன், எம்.இளையன், ஏ.ஆர்.பாஸ்கர், பிரபாகரன், வி.பி.பிரகாஷ், நடுகுத்தகை கே.சுரேஷ்குமார், டி.குமரேசன், ஏ.ஜி.ரவி, ஜி.சி.சி. கருணாநிதி, அக்னி மாசெ.ராஜேஷ், பிரியாகுமார், என்.சண்முகம், எம்.ராம்பாபு, சாய்மோகன், திருமலை ராஜ், கே.ஜி.ஆர்.ஸ்டாலின், மற்றும் ரமேஷ் பாபு, மதியழகன், ரவிக்குமார், வி.பி.சீகன், எம்.மூர்த்தி, ஆனந்த், கண்மணி, எஸ்.எஸ்.ராஜேந்திரன், வெங்கடேசன், , மாரிமுத்து, அனந்தன், பன்னீர், சி.மாரி, கேசவன், யுவராஜ், செந்தில் வேலன், தோரகேஷ், விக்கி, சல்வி உள்பட பலர் உள்ளனர்

## ‘வாட்ஸ் அப்’பில் வந்த செய்தி!



Agra Court stays BJP MP Ram Shankar Katheria conviction

August 07, 2023 10:53 pm | Updated 10:53 pm IST - Lucknow

The court order will help Mr. Katheria evade disqualification from Parliament

THE HINDU BUREAU

பா.ஜ.க. எம்.பி. ராம்சங்கர் கத்தேரியா மீதான தண்டனைக்கு ஆக்ரா நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

நீதிமன்ற உத்தரவு, கத்தேரியா நாடாளுமன்றத்தில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்படுவதைத் தவிர்க்க உதவும்.

## பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டிட முகப்பில்

# பொதுமக்கள் பார்வைக்கு ஆக்கிப் போட்டிகள் தொடர்பாக ஒலி ஒளி காட்சி!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

*சென்னை, ஆக. 10 -*

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆசிய ஹாக்கி சாம்பியன்ஷிப் போட்டியை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி, ரிப்பன் கட்டடத்தின் முகப்பில் ஹாக்கி போட்டிகள் தொடர்பான ஒலி, ஒளி காட்சியினை பொதுமக்களின் பார்வைக்கு நேற்று (09.08.2023) காட்சிப்படுத்தி தொடங்கி வைத்தார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆசிய ஹாக்கி சாம்பியன்ஷிப் போட்டியை முன்னிட்டு, ஹாக்கி போட்டிகள் தொடர்பான ஒலி, ஒளி காட்சியினை பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டடத்தின் முகப்பில் பொதுமக்களின் பார்வைக்கு இன்று (09.08.2023) காட்சிப்படுத்தி தொடங்கி வைத்தார்கள்.

சென்னையில் 7ஆவது ஆசிய ஹாக்கி சாம்பியன்ஷிப் 2023 போட்டிகள் மேயர் இராதாகிருஷ்ணன் விளையாட்டு அரங்கத்தில் 03.08.2023 முதல் 12.08.2023 வரை நடைபெற்று வருகிறது. இந்தப் போட்டிகளில் இந்தியா, தென்கொரியா, மலேசியா, ஜப்பான். பாகிஸ்தான் மற்றும் சீனா ஆகிய 6 நாடுகள் பங்கேற்றுள்ளன.

இதனை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டடத்தின் முகப்பில் ஹாக்கி போட்டிகள் தொடர்பான ஒலி, ஒளி காட்சிகள் பொது மக்களின் பார்வைக்கு நேற்று (09.08.2023) முதல் மூன்று நாட்கள் தினமும் மாலை 7.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை காட்சிப்படுத்தப்படுகிறது.

இந்நிகழ்வில், மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. தாயகம் கவி, திரு. இ.பரந்தாமன், மதிப்பிற்குரிய துணை மேயர் மு. மகேஷ் குமார், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாதரெட்டி, ஹாக்கி இந்தியா பொதுச் செயலாளர் போலாநாத் சிங், பொருளாளர் சேகர்மனோகரன் நிலைக்குழுத் தலைவர்கள், நியமனக் குழு உறுப்பினர்கள், மண்டலக் குழுத் தலைவர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## முத்தமிழறிஞர் கலைஞர் 5.வது நினைவு நாள்:

# 172 அ வட்டத்தில் 500 பேருக்கு உணவு

## எஸ்ஆர்.செந்தில் தலைமையில் வழங்கினர்

*சென்னை, ஆக.10 -*

முத்தமிழறிஞர் தமிழின தலைவர் அவர்களுடைய ஐந்தாம் ஆண்டு நினைவு நாளான 7-8.2023 அன்று சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்கு பகுதி 172 அ வட்டத்தில் மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன், பகுதிச் செயாளரும் மண்டலக் குழுத் தலைவருமான இரா. துரைராஜ் ஆகியோரது ஆலோசனைப்படி, சாத்தானிபேட்டை 500 பேருக்கு மற்றும் நேரு நகர் 2வது மெயின் ரோட்டில் 300 பேருக்கு இரண்டு பாகத்தில் தாகோ வெங்கடேசன், எம் நாராயணமூர்த்தி ஆகியோரது தலைமையில் மாவட்ட பிரதிநிதிகள் ஜி செல்வராஜ், வி.ரமேஷ் குமார் ஆகியோர் முன்னிலையில் வட்டச் செயலாளர் எஸ். ஆர். செந்தில் மதிய உணவு வழங்கினார்.

இதில் பகுதி பிரதிநிதி ஆர் சீனிவாசன், கே கே மோகன், செயற்குழு உறுப்பினர் ரவீந்தர், காமராஜபுரம் ராமர் ராஜ், பவன், பீட்டர், ஜெயவேல், கன்னிகாபுரம் குப்பன், நாராயணன், பூக்கடை வாசு, முனுசாமி, ராஜா ,ஆட்டோ மோகன், டைல்ஸ் மோகன், பெயிண்டர் கிருஷ்ணன், மோகன் ஆனந்த் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# தொப்பூர் - பவானி வரையிலான தேசிய நெடுஞ்சாலையில் சுங்கக் கட்டண சாவடி அமைக்கக் கூடாது!

## செந்தில்குமார் எம்.பி. வலியுறுத்தல்!



புதுடெல்லி, ஆக.10-

தொப்பூர் முதல் பவானி வரை மேட்டூர் வழியாக செல்லும் தேசிய இருவழி நெடுஞ்சாலையில் சுங்க கட்டணம் சாவடி அமைக்க கூடாது என்று தருமபுரி எம்.பி. மருத்துவர் செந்தில்குமார் எம்.பி. நடுவன் அமைச்சரிடம் நேரில் கடிதம் அளித்துள்ளார்

தர்மபுரி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் செந்தில்குமார் அவர்கள் புதுடில்லியில் மத்திய தரைவழி போக்குவரத்து துறை அமைச்சர் நிதின் கட்காரி அவர்களை நேரடியாக சந்தித்து தர்மபுரி நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட தொப்பூர் முதல் மேட்டூர் வரையிலான தேசிய நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான இருவழிப் பாதை சுமார் 33 கிலோமீட்டர் தற்பொழுது அகலப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

அகலப்படுத்த பணி முடிந்தவுடன் தேசிய நெடுஞ்சாலைத்துறை ஆணையம் தொப்பூர் முதல் மேட்டூர் வரையில் ஒரு இடத்திலும் சுங்க சாவடி அமைப்பதற்கும் ஈரோடு மாவட்ட பகுதியில் மற்றொரு சுங்க சாவடி அமைப்பதற்கும் தயாராக உள்ளனர்.

இதுபோன்ற இருவழி பாதையை சுமார் 1.5 மீட்டர் அளவிற்கு அகலப்படுத்தி விட்டு சுங்க சாவடி அமைப்பது என்பது இப்பாதையை பயன்படுத்தும் பல நூறு கிராம மக்கள் அன்றாட போக்குவரத்தை பாதிக்கும் மேலும் நான்கு சக்கரவாகனங்கள் . கார் மற்றும் மினி லாரிகள் போன்ற போக்குவரத்து பாதிக்கும் என்பதாலும் அதே நேரத்தில் தற்பொழுது விரிவாக்கம் செய்யப்படும் சாலை சுங்கச்சாவடி கட்டணம் வசூலிப்பதற்கு தகுதி இல்லாத சாலை ஆகும்.

இதுவரை நான்கு வழி சாலையில் மட்டுமே தேசிய நெடுஞ்சாலைத்துறை ஆணையம் சுங்கசாவடிகள் அமைக்கப்பட்டு வந்தன . தமிழகத்தில் தற்பொழுது இதுபோன்ற இருவழிச் சாலை வழி பாதையிலும் சுங்கம் வசூலிக்கதை இப்பகுதி பொதுமக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் ஆகவே தாங்கள் சுங்க சாவடி அமைப்பதை உடனடியாக கைவிட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

ஏற்கனவே இது சம்பந்தமாக கடந்த ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் இரு முறை சென்னையில் அமைந்துள்ள தேசிய நெடுஞ்சாலை துறையின் பொது மேலாளர் அவர்களுக்கும் அதன் பிறகு ஆகஸ்ட் முதல் வாரத்தில் ஜூலை முதல் வாரத்தில் புது டெல்லியில் அமைந்துள்ள தமிழ்நாடு பிரிவு முதுநிலை பொது மேலாளர் அவர்களிடமும் விரிவாக கடிதம் வாயிலாக சுங்க சாவடி அமைக்க கூடாது என நான் எதிர்ப்பு தெரிவித்துள்ளேன்.

பொது மக்களின் கோரிக்கையை ஏற்று கைவிட வேண்டும். இருவழிச் சாலை பாதையில் அதுவும் சுமார் 1.5 மீட்டர் மட்டுமே விரிவாக்க ம் செய்து அதில் சுங்கம் சாவடி அமைப்பதை தொகுதி மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதை மிகத் தெளிவாக விதியின் நிதின்கட்கரியுடன் எடுத்துரைத்துள்ளார்.

அவரும் ஆய்வு செய்து நடவடிக்கை எடுப்பதாக உறுதி கூறியுள்ளார்.

## நான் முதல்வன் - போட்டித் தேர்வு பிரிவு தமிழ்நாடு அரசின்

# யு.பி.எஸ்.சி. முதன்மைத் தேர்வுக்கான ஊக்கத் தொகை திட்டம்!

*சென்னை, அக. 10 -*

தமிழ் நாடு அரசின் 2023 24 க்கான பட்ஜெட் உரையில், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (TNSDC), அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியுடன் இணைந்து, ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் குடிமைப் பணிகள் தேர்வுகளுக்காகப் பயின்று வரும் ஆர்வமுள்ள மாணவர்களுக்கு சிறந்த பயிற்சி மற்றும் இதர தேவையான வசதிகளைச் செய்து உதவும் வகையில் ஒரு திட்டத்தை செயல்படுத்தும் என்று அறிவிக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின்படி யு.பி.எஸ்.சி குடிமைப் பணிகள் முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெறுவோருக்கு 25,000 ரூபாய் ஊக்கத்தொகையாக வழங்கப்படும்.

இத்திட்டத்தின் தொடக்கமாக. 07.08.2023, அன்று நடைபெற்ற நான் முதல்வன் திட்டத்தின் ஓராண்டு வெற்றி விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு.க. ஸ்டாலின் அவர்களால், 2023ஆம் ஆண்டுக்கான யு.பி.எஸ்.சி முத ல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த 10 மாணவர்களுக்கு முதன்மைத் தேர்வுக்குப் பயிற்சி மேற்கொள்ள ஏதுவாக தலா 25,000 ரூபா ய்க்கான காசோலைகள் வழங்கி யு.பி.எஸ்.சி முதன்மைத் தேர்வுக்கான ஊக்கத்தொகைத் திட்டம் தொடங்கிவைக்கப்பட்டது.

இதனைத்தொடர்ந்து, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் கீழ் இயங்கிவரும் நான் முதல்வன் போட்டித் தேர்வுகள் பிரிவின் வாயிலாக 2023 ஆம் ஆண்டுக்கான 28.05.2023 அன்று நடைபெற்ற யு.பி.எஸ்.சி முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த அனைத்து மாணவர்களுக்கும் முதன்மைத் தேர்வுக்குப் பயிற்சி மேற்கொள்ள ஏதுவாக 25,000 ரூபாய் ஊக்கத் தொகை நேரடியாக மாணவர்களின் வங்கிக் கணக்கில் செலுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த ஊக்கத்தொகையைப் பெறுவதற்கு யு.பி.எஸ்.சி முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்கள், https://www.naanmudhalvan.tn.gov.in என்ற இணையதளத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் அறிவிக்கையைப் படித்து பார்த்து, 11.08.2023 முதல் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். 22.08.2023 வரை விண்ணப்பிக்குமாறு சிறப்புத் திட்ட இயக்குநர்,

நான் முதல்வன் (போட்டித் தேர்வுகள் பிரிவு) தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு ஓய்வூதியர்கள் சங்க செயற்குழுக் கூட்டம்! குடும்பத் தலைவிகளுக்கு

# மாதந்தோறும் ரூ.1000 வழங்கும் திட்டத்தை அறிவித்த முதல்வருக்கு நன்றி!

## கோ.சீதாராமன் தலைமையில் நடைபெற்ற தமிழ்நாடு ஓய்வூதியர்கள் கூட்டத்தில் தீர்மானம்!

*சென்னை, ஆக. 10 -*

தமிழ்நாடு ஓய்வூதியர் சங்க மாநில செயற்குழுக் கூட்டம், 05- 08- 2023 அன்று காலை 10 மணியளவில், திருவல்லிக்கேணி, நெ. 7 நீலி வீராசாமி தெரு,”சிவ. இளங்கோ” இல்லத்தில், சங்க மாநிலத் தலைவர் கோ. சீதாராமன் தலைமையில் நடைபெற்றது. மாநிலத் தலைமை நிலையச் செயலர் வரவேற்புரையாற்றினார். செயற்குழுக் கூட்டத்தில் மாநிலம் முழு வதிலும் இருந்து 30 மாவட்டங்களின் நிர்வாகிகள் உள்பட 150 பேர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் 15.09.2023 முதல் மாநிலம் முழுவதிலும் “குடும்பத் தலைவி உரிமைத் தொகையாக ரூ. 1000/ வழங்கிட ஆணையிட்ட தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2021ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலின்போது, தேர்தல் வாக்குறுதியில் உறுதியளித்தபடி “70 அகவை முடித்த ஓய்வூதியர் / குடும்ப ஓய்வூதியர்களுக்கு 20 சதவிகித கூடுதல் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம், பழைய ஓய்வூதியத் திட்டத்தினை மீண்டும் நடைமுறைப்படுத்துதல், மருத்துவப்படி மாதந்தோறும் ரூ. 1000/ வழங்குதல், குடும்ப பாதுகாப்பு நிதியாக ரூ. 2 லட்சம் வழங்குதல், அங்கன்வாடி / சத்துணவுப் பணியாளர்களுக்கு நியாயமான ஓய்வூதியம் / கருணைத் தொகை வழங்கிட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

ஓய்வூதியர்கள் / குடும்ப ஓய்வூதியர்களுக்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள மருத்துவக் காப்பீடு திட்டத்தில் உள்ள குறைபாடுகளை களைதல் குறித்து விரிவாகப் பேசப்பட்டது. மேற்கண்ட நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்தி மாவட்டத் தலைநகர்களில் “பெருந்திரள் முறையீடு பேரணி” நடத்துவதென முடி வெடுக்கப்பட்டது.

மாநில துணைப் பொதுச் செயலாளர் டி.ஆர். அன்னியப்பன் நன்றி நவின்றிட, நாட்டுப்பண் இசைத்திட கூட்டம் இனிதே முடி வுற்றது என மாநிலத் தலைவர் கோ. சீதாராமன் எடுத்துரைத்தார்.

## குன்றத்தூர் தெற்கு ஒன்றியத்தில்

# கலைஞர் நூற்றாண்டு விழாவையெட்டி 100 தொடர் நிகழ்ச்சிகள்!

## படப்பை மனோகரன் அறிவிப்பு!

*சென்னை, ஆக. 10 -*

குன்றத்தூர் தெற்கு ஒன்றியம் திமுக சார்பில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஆண்டு முழுவதும் 100 தொடர் நிகழ்ச்சிகள் 55 புதிய கழக கல்வெட்டுகள் புதிய கழக கொடி கம்பங்களும் 5 பொதுக்கூட்டங்கள், 20 தெருமுனை கூட்டங்கள் 5 பேருந்து நிறுத்தம் அமைப்பது, விளையாட்டு போட்டிகள், மருத்துவமுகாம், நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாடுவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இது குறித்து காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் படப்பை ஆ.மனோகரன் அறிவிப்பு வருமாறு:-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் குன்றத்தூர் தெற்கு ஒன்றிய திமுக செயற்குழு உறுப்பினர் கூட்டம் படப்பை சி.என்.சி மகாலில் ஒன்றியக் கழகத் தலைவர் மு.சுப்பிரமணி தலைமையில் அமைச்சரும் மாவட்டச் செயலாளருமான தா.மோ.அன்பரசன் ஆலோசனைகிணங்க நடைபெற்றது.

இக் கூட்டத்தில் தலைவர் கலைஞர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஆண்டு முழுவதும் 100 தொடர் நிகழ்ச்சியாக 55 இடங்களில் புதிய கழக கல்வெட்டு மற்றும் புதிய கழக கொடி கம்பங்களும் அமைப்பது எனவும் 5 பொதுக்கூட்டங்களும் 20 தெருமுனை கூட்டங்களும், 5 பேருந்து நிறுத்தம் அமைப்பது, விளையாட்டு போட்டிகள் நடத்தவதும், மருத்துவமுகாம், நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பான கொண்டாடுவது என தீர்மானிக்கப்பட்டது.

இதில் ஊராட்சிகளில் புதியதாக 55 புதிய கழக கல்வெட்டு மற்றும் கழக கொடி கம்பங்கள் அமைப்பது எனவும், ஒன்றிய இளைஞர் அணி சார்பாக ஒரு புதிய கழக கொடி கல்வெட்டு புதிய கழக கொடி கம்பம் மற்றும் தெரு முனை கூட்டம், விளையாட்டு போட்டிகளும், ஒன்றிய மாணவர் அணி சார்பாக பொதுக்கூட்டமும் ஒன்றிய மகளிர் அணி சார்பாக ஒரு பொதுக்கூட்டமும் ஆக மொத்தம் 55 புதிய கழக கல்வெட்டு புதிய கழக கொடி கம்பங்களும் மற்றும் 5 பொதுக்கூட்டங்களும் 5 பேருந்து நிறுத்தங்களும், விளையாட்டு போட்டிகளும், மருத்துவ முகாம் மற்றும் நலத்திட்ட உதவிகளும் வழங்கி ஆண்டு முழுவதும் சிறப்பான முறையில் கொண்டாடுவது என ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

நாடாளுமன்ற தேர்தலை முன்னிட்டு மாவட்ட கழகம் அறிவிற்ப்பகிணங்க பாகமுகவர்கள் கூட்டமும், வாக்குச்சாவடி தோறும் தேர்தல் பணி குழு உறுப்பினர்கள் கூட்டத்தை சிறப்பான முறையில் நடத்துவது எனவும் ஒரு மனதாக தீர்மானிக்கப்பட்டது

இக் கூட்டத்தில் குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் வ.நந்தகோபால், ஏ.மணி, சி.பார்த்தசாரதி, மு.ராஜேந்திரன், மா.பரிமேலழகன் உள்ளிட்ட மாவட்ட ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகிகள், இளைஞரணி மகளிர் அணி மாணவர் அணி சேர்ந்த கழக தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



கலைஞர் அவர்களின் 5 வது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு 167வது வட்டசெயலாளர் ஜெ.நடராஜன் தலைமையில் நங்கநல்லூர் ஸ்டேட் பாங்க் காலனியில் அமைந்துள்ள அண்ணா சிலைக்கு ஆலந்தூர் தெற்கு பகுதி செயலாளரும், 12 வது மண்டல குழு தலைவருமான என். சந்திரன் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். பொதுக்குழு உறுப்பினர் எம்.எஸ். கே. இப்ராஹிம், மாவட்ட வர்த்தகரணிஅமைப்பாளர் ஆர்.ஆர்.ஜெயராம் மார்த்தாண்டன், பகுதி கழக நிர்வாகிகள் எஸ்.சுந்தர்ராஜன், ர.பாபு, ஏ.சாலமோன் எம்.சி., வட்ட கழக செயலாளர்கள், டி. ஜேசுதாஸ், இ. உலகநாதன், கே.ஆர். ஜெகதீஸ்வரன், ஏ. வேலவன், ஏ.ஆர். சரவணா, மாவட்ட பிரதிநிதிகள் மு.வெள்ளைச்சாமி, பி.செல்வம், எம்.வேல்முருகன், கி.அபிஷேக் , என்.பெருமாள், கே.வெற்றிவேல், வீ.ரமணா, வெ.பாண்டிசெல்வி, ரவி, எஸ். மதிவாணன், பாபு மெடிக்கல், விஜய் பாபு, அஜீத், மீன் மோகன், பிரான்சிஸ், சதீஷ், சுரேஷ், கீதா, செங்குட்டுவன், அலி, லத்தீப், குணா மற்றும் பலர் கலந்துகொண்டனர்.



மறைந்த மாநில சிறுபான்மை நல உரிமை பிரிவு துணை செயலாளர் LSS மோகன், அவர்கள் மறைந்த செய்தி அறிந்து சிறுபான்மை நல உரிமை பிரிவு மாநில செயலாளர் டாக்டர், சுபேர்கான், (ஆர்த்தோ) அவர்கள் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர், உடன் மாவட்ட சிறுபான்மை பிரிவு அமைப்பாளர் செ.ஆல்பர்ட், மற்றும் துணை தலைவர் துணை அமைப்பாளர்கள் ஆகியோரும் அஞ்சலி செலுத்தினர்.